என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதைக் கேட்டாலும் உங்கள் ஆட்சியில் இருந்தது, உங்கள் ஆட்சியில் இருந்தது என்று சொல்கிறீர்கள். எங்கள் ஆட்சியில் இருந்தது என்று சொல்லிக்கொண்டே இருந்தீர்களென்றால், எங்கள் ஆட்சிமாதிரி வந்துவிடுவீர்கள். ஆகையால், நாங்கள் கேட்பது, M.L.A.–க்களுக்குக் கொடுக்கிறீர்கள். நீங்கள் சில இடங்களில் ரோடு போடுகிறீர்கள். Private இடமாக இருக்கும். ஆனால், அந்த ஊரில் ஓட்டு கிடைக்கும். அங்கு School இருக்கிறது, Private நடத்துகிறார்கள். அவர்களுக்கு நாம் ஏதேனும் செய்து கொடுக்க வேண்டும். இதற்கெல்லாம் உங்கள் norms ஒத்து வருவது கிடையாது. நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், எங்களுக்குக் கொடுக்கிற நிதியை எங்கள் இஷ்டத்திற்கு, எங்கள் தொகுதியில் பணிகள் செய்வதற்கு நீங்கள் எதற்குக் கடிவாளம் போடுகிறீர்கள் என்றுதான் கேட்கிறோம். நீங்களும் உறுப்பினர்தானே! (குறுக்கீடு) நீங்களும் உறுப்பினர்தானே! நீங்களும் ஒரு வீட்டுக்கு மருமகன்தானே! ஆக, 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்துதான் நான் கேட்கிறேன். இது உங்களுக்கும் சேர்த்துதான் Sir. உங்களுக்கும். (சிரிப்பு) ஆகையினால், Finance Minister இருக்கிறார். உங்கள் பழைய கதையை எல்லாம் நீங்கள் பேசக் கூடாது. Correct–ஆக, நீங்கள் கூடுதலாகக் கேட்க வேண்டும். (குறுக்கீடு) அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. இருக்கிறதை ஒழுங்காகக் கொடுத்தால் போதுமென்பதுதான் என்னுடைய கருத்து. ஆகையால், high–mast lighting–க்கும் மற்றும் பணம் restriction இல்லாமல் இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம்.

(ஆஈ) பொன்னேரி தொகுதி, சிறுவாபுரி பாலசுப்பிரமணியர் கோயில் குளத்தைத் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, சிறுவாபுரி, அருள்மிகு

2019 ஜூலை 20] [முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்]

பாலசுப்பிரமணியர் கோயில் மிகவும் பிரசித்தமான ஒரு திருத்தலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் கோயிலுக்குப் பின்புறம் 2 ஏக்கர் பரப்பளவில் ஒரு குளம் உள்ளது. இந்தக் கோயில் நிதி 16 கோடி ரூபாய் deposit*–ல் உள்ளது. இந்தக் கோயில் நிதியிலிருந்து அந்தக் குளத்தைத் தூர் வாருவதற்காக* estimate *போட்டு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, கோயில் நிதியிலிருந்து அந்தக் குளத்தைத் தூர் வாருவதற்கான அனுமதியை இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 11–15

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). (குறுக்கீடு) 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஏ.பி. நந்தகுமார், உட்காருங்கள், அடுத்த தடவை வாய்ப்புத் தருகிறேன்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*